உ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீரங்கநாயகர்பேரில்

திருவூசல்.

இஃது

திரு-சண்முகசுவாமியவர்களால்

பார்வையிடப்பட்டு

திரு-சுப்பராயதேசிகரவர்களது

கல்விப்பிரவாகவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இவ்வச்சுக்கூடத்துத்தலைவர்

திரு-பச்சையப்பபெருமாள்நாயகர்

ஜூலை-பாப்பையர்வீதி-கூஅ-ெந.

உ

ஸ்ரீரங்கநாதர்பேரில்

திருவூசல்.

தார்சிறந்தமுத்ததிறற்கால்கணாட்டித் ... *
தனிப்பவளக்கொம்பதிறற்கொடுங்கைமாட்
டார்சிறந்தவைரத்தாற்பலகைபூட்டி [டி
வண்ணநவமணிமாலைவயங்கச்சூட்டி ... ... *
ஏர்சிறந்தசித்திரங்களெங்குந்தீட்டி ... *
இலகுதிருப்பொன்னூசற்சேவைகாட்டி ... *
சீர்சிறந்தமாதவனாராடீரூசல் ... . *
ஸ்ரீரங்கநாயகனாராடீரூசல் ... ... (க)

அணியணியாய்த்தேவர்கள்வந்தடிகொண்டா
ட,அந்தரர்கின்னரர்கருடரணிந்துபாட)...*
கணிகையர்கள்கொலுமுகத்திற்களித்தேயாட*
கன்னியர்களிருமருங்குங்கவரிபோட.... ....*
பணிவுடனேமுனிவரெல்லாம்பரிந்துதேட*
பன்னிருவராழ்வார்கள்பதத்திஞுட... ...*
திணிவுபெறுந்திருமார்பாவாடீரூசல் ...*
சீரங்கநாயகனாராடீரூசல், ... (உ)

மாமறையோர்மாமுனிவோர் வருந்திப்போற்
வானவர் கள்பூமாரிமகிழ்ந்துதூற்ற. [ற.
சேமமுடனேம்முரசஞ்சிறக்கச்சாற்ற......*
தெரிவையர்கள்திருவாலஞ்சிறந்துமாற்ற ·*
பூமகளும்பூமகளுமருகில்வாழ்க. *
பொன்னடியிலாழ்வார்கள்பொலிந்துதாழ்க
தேமருவுங்காவேரிச்சிறந்துசூழ்க *
சீரங்கநாயகனாராடீரூசல் (௩)

பொன்னணிந்தநவமணிமாமாலையாட ...*
புகழ்பெரியவண்டுளடமாலையாட. *
வன்னமுள்ளசந்திரவட்டக்குடைகளாட. *

மகரமணிக்கண்டிகையாமாலையாட ... ... *
மன்னுமணிமுடியாடப்பதக்கமாட ... ... *
வாகுவலயங்களுமேபோங்கியாட. *
செந்நெல்விளைவயல்சூழ்ந்துசெறிந்தேயோ
ங்குஞ்,சீரங்கநாயகனாராடீரூசல் .... (௪)

இந்திரரும்வானவரும்வடந்தொட்டாட்ட. .. *
இறையவரும்மறையவரும்வடந்தொட்டாட்ட
சந்திரரும்சூரியரும்வடந்தொட்டாட்ட ... *
தானவருமானவரும்வடந்தொட்டாட்ட ... *
கொந்தலருங்குழன்மடவார்வடந்தொட்டாட்
ட,கோகனகப்பொற்பாதங்குலுங்கியாட ... *
சிந்தைமகிழ்திருவரங்கராடீரூசல் *
சீரங்கநாயகனாராடீரூசல். (௫)

சதுர்மறையைத்திருவடியவன் றன்னைவென்
றோன்,தனியிலங்கைராவணனார் தனையுங்கொ
ன்றோன், அதிசயமாய்ப்பாண்டவரைக்காத்த
மூர்த்தி, ஆலிலைமேற்பள்ளிகொண்டவாதிமூ
ர்த்தி; கதிரொளியாய்ப்புவியளந்தகருணையா
ளன்,கன்னியர்கள் துயிலுரிந்தகள்ளமாயன்,*

சதுரிலங்குஞ்சீரங்கராமனூசல் *
ஜானகிசீரங்கனுராமனூசல். (௬)

வச்சிரமணித்தங்கதாற்கால்களூட்டி *
வைரக்கோமேதகத்தாற்பலகைபூட்டி *
டச்சையெனுமரகதத்தாற்கொடுங்கைநாட்டி.
பசும்பொன்னின்சங்கிலிகள்வடங்கள்பூட்டி *
உச்சிதமாய்வானவர்கள்சமைத்தவூசல்.... *
உலகளந்தமாயவனருண்மையாக. *
செச்சையணிமாதவனுராமனூசல். *
சீரங்கநாயகனுராமனூசல். (௭)

மாமறையைநவமணியாங்கால்களாக்கி. *
வழுத்துமறசாத்திரத்தைப்பலகையாக்கி *
தூமருவும்புராணமதைக்கொடுங்கையாக்கி *
சொல்லரியபலகலையைச்சங்கிலிகளாக்கி.... *
பூமகளுநிலமகளும்பொற்பாயோங்க. *
பொன்னுலகோர்செய்தமைத்தபொன்னினூ
சல், தேமருவுவண்டுளபமாலைபூண்ட ..... *
சீரங்கநாயகனுராமனூசல். (௮)

திருவூசல்.

இங்கிதமாயிந்திரரும்வந்துபோற்ற .... *
இனிமையுள்ளவடியார்கள்தாழ்ந்துபோற்ற *
துங்கமுள்ளநவசித்தர்துதித்தும்போற்ற .. *
சொல்லுபதினெண்கணமுந் தொழுதுபோ
ற்ற, எங்குமுள்ளவண்டத்தோரேத்திப்போற்
ற, ஈராறுமாழ்வார்களிணங்கிப்போற்ற. .... *
செங்கமலையாளுடனேயாடீரூசல் *
ஸ்ரீரங்கநாயகனாராடீரூசல். (௬)

மலர்மேவுதிருமகளோர்பக்கமேவ *
வாட்டடங்கணிலமகளோர்பக்கமேவ *
நலமேவுபன்னிரண்டாழ்வார்கள்போற்ற... *
நாதமுனிமுதலானோர் வணங்கியேத்த. *
வலமேவுமைம்படைகள்கையிலோங்க ... *
மறுமார்பிற்கவுஸ்துவாபரணமாடச் *
சிலைமேவுமலர்க்கரத்தாராடீரூசல் *
ஸ்ரீரங்கநாயகனாராடீரூசல். (௭)

இடையினிற்பீதாம்பரந்தானிருந்து மின்ன *
எழிற்கரத்திற்பஞ்சவாயுதங்கள்மின்ன .... *
வடிவுபெறுந்திருமேனிவண்ணமின்ன ... *

மதிவதனங்கிருபையொடுமகிழ்ந்துமின்ன *
முடிதனிமேல்முடிமாலைமுயங்கிமின்ன *
மொழிய மார்பிற்கவுத்வ மணிமுன் னமின்ன *
திடமேவுங்காவேரிச்சிறந்திருக்கும். *
ஸ்ரீரங்கநாயகனாராடூசல். (௰௧)

ஸ்ரீரங்கநாயகர்திருவூசல்

முற்றிற்று.

காளயுக்தி௵ வையாசிமீ.